"சிறிய விஷயங்களைச் செய்ய ஒரு காலத்திலும் மறுக்காதீர்கள்; ஏனெனில் சிறிய விஷயங்களை வைத்துத்தான் பெரிய விஷயங்கள் உருவாக்கப்படுகின்றன. ○✱○ மக்கள் நலன்களுக்கு மேலே கட்சி நலன்களை நாம் கருதக் கூடாது ○✱○ நமக்குள்ள வேறுபாடுகளை [illegible] முறையாக மக்கள் மாத்திரமே தீர்க்க முடியும் ○✱○

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி நாடுகள் கொண்ட மத்திய கிழக்கு ராணுவ ஸ்தாபனத்துக்கு பதிலாக மத்திய கிழக்கு பிரதேச பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்வதின் மூலம் பிரச்னை தீர்க்கப்படலாம். இந்த ஒப்பந்தம் வட அட்லாண்டிக் அல்லது மத்திய தரைக்கடல் பிரதேச ஒப்பந்தத்துடன் இணைக்கப்படுவதின் மூலம் ஆங்கிலோ-அமெரிக்க ஆதிக்கம் உத்தரவாதம் செய்யப்படும். இந்த ஒப்பந்தத்தில் எகிப்துக்கு சில சலுகைகள் வழங்கப்படும். இக்கருத்துக்களை சில நாட்களுக்கு முன் ஆங்கிலோ-அமெரிக்க தூண்டுதலின் பேரில் ஈராக் பிரதமரும், ஜோர்டான் சர்க்காரும் முன் வைத்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த ஒப்பந்தம் அலி மேஹர் பாஷாவின் பிரேரணைகளுக்கு உடன்பாடாகவேயுள்ளது. இதைப் பகைப்புலமாகக் கொண்டு பிரிட்டன் எகிப்துடன் பேச்சுவார்த்தைகளின் கீழ் கண்டவை [illegible] உள்ளன:- (1) சூயஸ் பிரதேசத்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ் ஆகும் (2) சூயஸ் கால்வாய் உபயோககரமான நிலையில் இருக்க பிரிட்டிஷ் தொழில் நிபுணர்களும், மற்றவர்களும் கொண்ட ஸ்தாபனம் அங்கு இருக்கும். (3) எகிப்து துருப்புகளுக்கு ஆயுதமளிப்பதும், பயிற்சி கொடுப்பதையும் பிரிட்டிஷார் செய்வார்கள். (4) சூடான் பிரச்னையை இந்த பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக் கொள்வதா இல்லையா என்பதும் முடிவு செய்யப்படும். இதன் நடுவே, சூயஸ் கால்வாய் பிரதேச எகிப்திய கவர்னருக்கும் எகிப்திலுள்ள பிரிட்டிஷ் சேனாபதிக்கும் அங்கு "அமைதி" நிலை நாட்டுவதைப் பற்றி "ரகசிய" பேச்சுக்கள் நடக்கின்றன. ஜனவரி 26ம் தேதி நடந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் சேதமடைந்த பிரிட்டிஷ்-அமெரிக்க சொத்துகளுக்கு நஷ்டஈடு கொடுக்க 50 லட்சம் பவுன்களை சர்க்கார் சேமிப்பு நிதியிலிருந்து எடுக்கும்படி மன்னர் பரூக் உத்தரவு பிறப்பித்துள்ளார் ○✱○

இந்த பொதுத் தேர்தலில் ஜனநாயக சக்திகள் அடைந்துள்ள வெற்றி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது. ஏகாதிபத்திய யுத்த வெறியர்களுக்கு அது ஒரு எச்சரிக்கையாக அமைந்திருக்கிறது ○✱○ சென்னை, ஹைதராபாத், தி-கொ, மாகாணங்களில் ஜனநாயக சக்திகள் அடைந்த வெற்றிகள் இந்தியா முழுவதும் மக்கள் இயக்கம் வளர்வதற்கு பேருதவி செய்திருக்கிறது ○✱○ ஜனநாயக சக்தியாக வளர்ந்து வருவதை இந்தத் தேர்தல் எடுத்துக் காட்டுகின்றது ○✱○ பரந்த ஜனநாயக முன்னணியை உருவாக்குவதற்கு இடைவிடாது பாடுபட வேண்டும் என்றும் ○✱○ மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய திட்டத்தை கூட்டாக உருவாக்கி ஐ. மு. சர்க்காரை அமைக்க வேண்டும் ○✱○ காங்கிரஸல்லாத எம்.எல்.ஏ.கள் ஒன்றுபட வேண்டும் ○✱○ இந்த நோக்கோடு இதற்கு ஆதரவாக ஜனநாயக சக்திகள் பொதுமக்களை ஒன்று திரட்ட வேண்டுமென்று வலியுறுத்தினார் ○✱○

அன்பு நண்ப! [illegible]